# தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப்பணிகள் துறை,
## தென்மண்டலம் மதுரை

# கழிவு செய்யப்பட்ட வாகனங்கள்-ஏல விற்பனை அறிவிப்பு

## அறிவிப்பு எண்:790/அ/2022 நாள்: 01.09.2022

தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புபணிகள் துறை சார்ந்த கழிவு செய்யப்பட்ட கீழ்கண்ட வாகனங்கள் ஒப்பந்தப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

| S. NO | TYPE OF VEHICLE | MAKE | MODEL | REG.NO | RESERVE PRICE | VEHICLE PARKING & INSPECTING PLACE | CONTACT NO |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | Water Tender (Fire Fighting Vehicle) | Ashok Leyland | 1992 | TN 37 G 0218 | Rs.107500/- | Fire and Rescue Station Palayamkottai | DFO-9445086249 SO-9445086251 |
| 2. | Water Tender (Fire Fighting Vehicle) | Ashok Leyland | 1999 | TN 38 G 0308 | Rs.103000/- | Fire and Rescue Station Palayamkottai | DFO-9445086249 SO-9445086251 |
| 3. | Water Tender (Fire Fighting Vehicle) | Ashok Leyland | 2004 | TN 38 G 0615 | Rs.299000/- | Fire and Rescue Station Ramanathapuram | DFO-9445086229 SO-9445086231 |
| 4. | Water Tender (Fire Fighting Vehicle) | Ashok Leyland | 1999 | TN 38 G 0341 | Rs.148000/- | Fire and Rescue Station Periyakulam | DFO-9445086265 SO-9445086270 |
| 5. | Water Tender (Fire Fighting Vehicle) | Ashok Leyland | 2000 | TN 38 G 0363 | Rs.154200/- | Fire and Rescue Station Anupanadi | DFO-9445086206 SO-9445086210 |
| 6. | Water Lorry (Fire Fighting Vehicle) | Ashok Leyland | 1993 | TN 65 G 0084 | Rs.119700/- | Fire and Rescue Station Ramanathapuram | DFO-9445086229 SO-9445086231 |
| 7. | Ambassador Car | Hindustan Motors | 1996 | TN 07 G 0995 | Rs.30500/- | Fire and Rescue Station Palayamkottai | DFO-9445086249 SO-9445086251 |
| 8. | Ambassador Car | Hindustan Motors | 2009 | TN 01 G 4694 | Rs.35000/- | Fire and Rescue Station Tallakulam | DFO-9445086206 SO-9445086215 |
| 9. | Ambassador Car | Hindustan Motors | 1991 | TN 01 G 0278 | Rs.18500/- | Fire and Rescue Station Anupanadi | DFO-9445086206 SO-9445086210 |
| 10. | Ambulance Vehicle | Bajaj | 1982 | TN 01 G 0385 | Rs.26000/- | Fire and Rescue Station Sholavanthan | DFO-9445086206 SO-9445086211 |
| 11. | Ambulance Vehicle | Bajaj | 1990 | TN 01 G 0200 | Rs.18500/- | Fire and Rescue Station Periyakulam | DFO-9445086265 SO-9445086270 |
| 12. | Royal Enfield | Enfield | 1987 | TSB 4368 | Rs.30400/- | Fire and Rescue Station Viruthunagar | DFO-9445086288 SO-9445086210 |

## கழிவு செய்யப்பட்ட வாகனங்களை ஏலம் எடுப்பதற்கான நிபந்தனைகள்

பகிரங்க ஏலப்பதிவு மற்றும் முன்பணம் செலுத்தும் நாள் 20.09.2022 காலை 09.00 மணி முதல் 10.00 மணி வரை

ஏலம் நடைபெறும் இடம் : மாவட்ட அலுவலர் அலுவலகம், மதுரை மாவட்ட ஆட்சியர் வளாகம் மதுரை.

| | | |
|---|---|---|
| 1. | ஒப்பந்தப்புள்ளி படிவம் (Tender) கொடுக்கப்படும் ஆரம்ப நாள் | 05.09.2022 |
| 2. | ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்படும் கடைசி நாள் மற்றும் நேரம் | 20.09.2022/09.00 |
| 3. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் இவ்வலுவலகத்தில் பெறுவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம் | 20.09.2022/10.00 |
| 4. | இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி உறைகள் திறந்து பகிரங்க ஏல அறிவிப்பு செய்யும் நாள் மற்றும் நேரம் | 20.09.2022/11.00 |
| 5. | விற்பனை உறுதி (வாய்மொழி) செய்யப்பட்ட வாகனங்களுக்கு முழு ஏலத்தொகையும் செலுத்த வேண்டிய நாள் மற்றும் நேரம் | 24.09.2022/04.30 |

Scanned with CamScanner

6. டெண்டர் படிவத்துடன் டெண்டர்தாரர் எந்த வகையான வாகனத்திற்கு டெண்டர் அளிக்க விரும்புகிறாரோ அந்த வகையான வாகன விவரங்கள் மட்டுமே அளிக்கப்படும். டெண்டர் படிவத்தின் விலை பின்வருமாறு.

| வ. எண் | வாகனங்களின் வகை | படிவத்தின் விலை |
|---|---|---|
| 1. | கனரக வாகனங்கள் HMV | ரூ.200/- |
| 2. | வேன் | ரூ.100/- |
| 3. | கார் மற்றும் ஜீப் வகை | ரூ.100/- |
| 4. | இருசக்கர வாகனங்கள் | ரூ.50/- |

7. ஒவ்வொரு வாகனத்திற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் தனித்தனி படிவத்தில் அந்தந்த வாகனத்திற்கான பிணைமுறித் தொகைக்கு குறையாத அளவில் வங்கியில் 05.09.2022 தேதி முதல் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலையை இணைத்து முத்திரையிட்ட உறையில் வைத்து அனுப்ப வேண்டும். மேலும், ஏலத்திற்கான கேட்பு வரைவோலை Deputy Director, TN Fire & Rescue Service Dept , Southern Region, Madurai என்ற முகவரிக்கு எடுக்கப்பட்டு SBI, (IFSC Code No: SBIN0007922) வங்கியில் மாற்றத்தக்கதாக இருக்க வேண்டும். உறையின்மீது ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்படும் வாகனத்தின் பதிவு எண், தயாரிப்பு, அட்டவணை, வரிசை எண் ஆகியவற்றை பெரிய எழுத்துக்களில் எழுதி தெரிவிக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளிகள் துணை இயக்குநர் தீயணைப்பு-மீட்புபணிகள் துறை, தென்மண்டலம், எண் : 47, ஜே.கே.நகர், 5-வது குறுக்குத்தெரு, நாராயணபுரம், மதுரை-14 என்ற முகவரிக்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் 20.09.2022 காலை 10.00 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். அதற்குபின் காலதாமதமாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணத்தினை கொண்டும் ஏற்கப்படமாட்டாது. மேலும் உறையின் மீது மேற்படி விவரங்களை எழுதி தெரிவிக்கப்படாத உறைகள் திறக்கப்பட மாட்டாது, ஏலத்தில் சேர்த்துக்கொள்ளப்படவும் மாட்டாது.

8. ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட வேண்டிய பிணைமுறித்தொகையின் விவரம் (Earnest Money Deposit) பின்வருமாறு.

| வ. எண் | வாகனங்களின் வகை | பிணைமுறி தொகை EMD |
|---|---|---|
| 1. | கனரக வாகனங்கள் | ரூ.5000/- |
| 2. | சீருந்துகள், வேன்கள், ஈப்புகள், இலகுரக நான்கு சக்கர வாகனங்கள் | ரூ.2000/- |
| 3. | இருசக்கர வாகனங்கள் | ரூ.1000/- |

இது தவிர ஒப்பந்தப்புள்ளி கோராமல் நேரடியாக பொது ஏலத்தில் மட்டும் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் மேற்குறிப்பிட்ட பிணைமுறித்தொகையை பணமாகவோ அல்லது வரைவோலையாகவோ செலுத்தலாம்.

9. பிணைமுறித்தொகைக்கான வங்கி வரைவோலையின் பின்புறத்தில் ஏலதாரின் பெயர் ஏல அட்டவணை வரிசை எண் மற்றும் வாகன பதிவு எண் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும் (ஏலதாரர் கையொப்பம் இடக்கூடாது)

10. பிணைமுறித்தொகைக்கான வங்கி வரைவோலைகளை மற்ற ஏலதாரருக்கு செலுத்த வேண்டிய தொகைக்கு மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி போன்றவற்றிற்காக மாற்றப்படுதல் ஏற்கப்படமாட்டாது.

11. விற்பனைக்காக பட்டியலிட்டு தெரிவிக்கப்படும் வாகனங்களின் பதிவு எண் /தயாரிப்பு /மாடல் மற்றும் இருக்குமடம் அந்தந்த வாகனங்களின் ஏல அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வாகனத்திற்கு ஏல ஒப்பந்தப்புள்ளி கொடுக்க விரும்புவோர் எந்தவொரு வேலை நாட்களிலும் வாகனங்களை சென்று பார்வையிடலாம். மேலும் வாகனங்கள் உள்ளது, உள்ளபடியேயான நிலையில் **(As is where is basis)** விற்பனை செய்யப்படுகிறது.

12. வாகனங்களுக்கு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் கொண்ட உறைகள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்த ஏலதாரர்கள் முன்னிலையில் தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புபணித்துறை அலுவலகத்தால் விளம்பரத்தில் குறிப்பிட்ட இடம் நாளில் காலை 11.00 மணி அளவில் திறக்கப்படும்.

13. அதிகபட்ச விலைப்புள்ளிகள் அளித்துள்ள டெண்டர்தாரர் அல்லது பகிரங்க ஏலம் எடுத்தவர் பெயர் தெரிவிக்கப்பட்டவுடன், அவரால் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் தொகையை வங்கி வரைவோலையாக அல்லது ரொக்கமாக ஏலம் விடப்படும் தேதியன்று மாலை 05.00 மணிக்குள் இவ்வலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் ஏலதாரர் செலுத்தியுள்ள EMD-க்கான வங்கி வரைவோலை பறிமுதல் **(Forefeit)** செய்யப்பட்டு அரசுக்கணக்கில் செலுத்தப்படும்.

14. எந்தவொரு வாகனத்திற்கும் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்படாவிட்டால் ஏலதாரர் செலுத்தியுள்ள பிணை முறித்தொகை ஒப்பந்தப்புள்ளி உறையில் அவர் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு தபாலில் திருப்பி அனுப்பி வைக்கப்படும். முகவரி இல்லாத பிணை முறித்தொகை பறிமுதல் செய்து இத்துறையின் தலைப்பில் செலுத்தப்படும்.

15. ஏலதாரர் எந்தவொரு வாகனத்திற்கும் முழு ஏலத்தொகை செலுத்திய நாளில் இருந்து இரண்டு தினங்களுக்குள் ஏலத்தொகை மீதான சரக்கு மற்றும் சேவை வரி செலுத்தி வாகன விடுவிப்பு உத்தரவினை பெற்றுக்கொள்ள வேண்டும். பிணை முறித்தொகை, ஏலத்தொகை, சரக்கு மற்றும் சேவை வரி மொத்தம் மூன்று வரைவோலைகள் வரை மட்டும் செலுத்தலாம் மேலும், ஆறு வரைவோலைகள் கூடுதலாக ஏலதாரர் செலுத்தும் நிலையில் Processing fees ஆக ரூ.50/-(ரூபாய் ஐம்பது மட்டும்) ரொக்கமாக கணக்கு அலுவலக

Scanned with CamScanner

பிரிவில் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு, ரசீது நகலுடன் வங்கி வரைவோலைகளை சேர்த்து அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். ஆறு வங்கி வரைவோலைகளுக்கு மேல் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

16. ஏலதாரர் நிபந்தனைகளில் தெரிவித்துள்ள காலக்கெடுவிற்குள் ஏலத்தொகை, சரக்கு மற்றும் சேவை வரி செலுத்த தவறினால், அன்னார் ஏற்கனவே செலுத்திய தொகை பறிமுதல் செய்து அரசு கணக்கில் சேர்க்கப்படும். அதன் பின்னர், ஏலதாரரின் எந்தவொரு கோரிக்கையும் ஏற்கப்பட மாட்டாது.

17. பகிரங்க ஏலம் மற்றும் பொது ஏலம் (Auction Cum Tender) நடைபெறும் நாளுக்கு முந்தைய நாள் மாலை 04.00 மணி வரை துணை இயக்குநர் தீயணைப்பு-மீட்புபணிகள் துறை, தென்மண்டலம், எண் : 47, ஜே.கே.நகர், 5-வது குறுக்குத்தெரு, நாராயணபுரம், மதுரை-14 என்ற முகவரியில் ஒப்பந்தப்புள்ளி படிவம் பெற்றுக்கொள்ளலாம், பகிரங்க ஏலம் மற்றும் பொது ஏலம் மூலம் அட்டவணையில் தெரிவிக்கப்பட்ட வாகனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அனுப்பும் உறைகள் சம்மந்தப்பட்ட அலுவலகங்களுக்குச் சென்று பார்வையிட்டு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கவோ அல்லது நேரிடையாக சென்று வாய்மொழி ஏலமோ கேட்க வேண்டும், பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புபணிகள் துறை அலுவலகத்தால் ஏலநாளில் முற்பகல் 10.00 மணி வரை பெறப்படும்.

18. ஏலத்தில் கலந்துகொள்ளும் ஒவ்வொரு நபரிடமிருந்து நுழைவுக் கட்டணமாக ரூ.100/- (ரூபாய் நூறு மட்டும்) வசூலிக்கப்படும். இத்தொகை திருப்பித் தரப்படாத தொகையாகும். மேலும், பொது ஏலத்தில் உள்ள வாகனங்களை டெண்டர் படிவம் மூலம் ஒப்பந்தப்புள்ளி கொடுக்கப்படவிருக்கும் ஏலதாரர் அந்தந்த வாகனங்களுக்கேற்ப குறிப்பிடப்பட்டுள்ள பிணைத்தொகைக்கான வங்கி வரைவோலையை இணைத்து அனுப்ப வேண்டும். வெற்றிபெறும் ஏலதாரர் பொது ஏலத்தில் ஒவ்வொரு வாகனத்திற்கும் அவர் ஏலத்தில் கோரிய தொகையை ஏலம் நடந்த நாளன்று மாலை 05.00 மணிக்குள் செலுத்த வேண்டும்.

19. E.M.D தொகைக்கான வங்கி வரைவுகள் அறிவிக்கப்பட்டுள்ள ஏலம் நடைபெறவுள்ள நாளுக்கு முன்னர் 15 நாட்களுக்குள் எடுக்கப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

20. மொத்த ஏலத்தொகையும் சரக்கு மற்றும் சேவை வரியும் தனித்தனி காசோலையாக பாக்கி இல்லாமல் செலுத்திய ஏலதாரருக்கு செலுத்திய வங்கி வரைவோலைகள் வங்கியில் செலுத்தப்பட்ட **(Remittance)** தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் துறை அலுவலக கணக்குப்பிரிவிலிருந்து பெறப்பட்ட பின்பு 15 நாட்களுக்குள் நேரடியாக ஏலதாரரின் மாதிரி கையொப்பம் வாகன விடுப்பு ஆணை படிவத்தில் பெறப்பட்டு வழங்கப்படும்.

21. வெற்றி பெறும் ஏலதாரர் ஒப்பந்த படிவத்தில் இடப்பட்ட கையொப்பமும் வாகன விடுப்பு உத்தரவில் இடப்படும் கையொப்பமும் வித்தியாசப்படுமாயின் வாகன விடுவிப்பு உத்தரவு வழங்கப்படமாட்டாது.

22. ஏலதாரர் டெண்டர் படிவம் சமர்ப்பிக்கும்போது பின்வரும் அடையாள ஆவணங்களான 1.ஆதார் அட்டை, 2.பாஸ்போர்ட், 3.ஓட்டுநர் உரிமம், 4.வாக்காளர் அடையாள அட்டை, 5.பான்கார்டு, 6.அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய ஆவணம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் சுய கையொப்பமிட்ட நகலுடன் ஏலப்பட்டியலுடன் சமர்ப்பிக்க வேண்டும். மேலும், நிறுவனங்களின் பெயரில் டெண்டர் விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நபருக்கு உரிய மேற்கூறப்பட்ட அடையாள ஆவணங்களின் நகல்கள் மற்றும் நபரினை அங்கீகரித்து நிறுவனம் அளித்துள்ள கடிதத்துடன் விண்ணப்பிக்க வேண்டும். மேலும் வாகன விடுவிப்பாணை வழங்கும்போது, ஏல விண்ணப்பம் சமர்ப்பிக்கும்போது அளித்திருந்த மேற்கூறப்பட்ட புகைப்பட ஆதாரங்களின் அசல் ஆவணங்களை சமர்ப்பித்து விடுவிப்பாணை பெற வேண்டும்.

23. வாகன விடுவிப்பாணை ஒப்பந்தப்புள்ளி அளித்தவரின் பெயரில் வழங்கப்படாது. அன்னாரின் அங்கீகாரம் பெற்றவரின் பெயருக்கு விடுவிப்பாணை வழங்க வேண்டுமெனில் அங்கீகாரம் பெற்றவரின் அடையாளத்தை காட்டும் வகையில் பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றில் ஓர் அரசு பதிவு பெற்ற அதிகாரியின் சான்றொப்பம் பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே அங்கீகாரம் அளித்தவரின் பெயரில் வாகன விடுவிப்பாணை வழங்கப்படும். பின்வரும் அடையாள ஆவணங்களான 1.ஆதார் அட்டை, 2.பாஸ்போர்ட், 3.ஓட்டுநர் உரிமம், 4.வாக்காளர் அடையாள அட்டை, 5.பான்கார்டு, 6.அரசால் வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய ஆவணம்.

24. இந்த அலுவலகத்திலிருந்து வாகன விடுவிப்பு பெற்றுக்கொண்ட 45 தினங்களுக்குள் ஏலதாரர் வாகனம் இருக்குமிடம் சென்று வாகனத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். 45 தினங்கள் கடந்தும் வாகனத்தை எடுத்துக் கொள்ளாவிட்டால் ஏற்படும் கால தாமதத்திற்கு கொட்டகை வாடகை நாளொன்றிற்கு ரூ100/- வீதம் வசூலிக்கப்படும். மேலும் 60 நாட்கள் (இரண்டு மாத காலம்) கொட்டகை வாடகை தொகை செலுத்தி பெறுக் கொள்ள கால அவகாசம் வழங்கப்படுகிறது. அந்த காலத்திற்குள் ஏலதாரர் வாகனத்தை விடுவித்துக்கொள்ளவில்லையென்றால் அவ்வாகனத்தை ஏலதாரர் எடுத்துக்கொள்ள விரும்பாதவராக உள்ளார் என கருதப்பட்டு மறு ஏலத்தில் சேர்த்து விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும், ஏலதாரர் செலுத்திய தொகை அரசுக்கணக்கில் செலுத்தப்படும் என்பதனையும் ஏலதாரர்களுக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் மேற்கண்டவாறு உரிய காலத்திற்குள் வாகனத்தை டெலிவரி எடுத்துக்கொள்ளாத ஏலதாரரால் தெரிவிக்கப்படும் எந்த கோரிக்கையும் ஏற்கப்பட்மாட்டாது. மேலும் **Central Motor Vehicle Rules 1989** விதி எண்: 57(1)-ன்படி வாகனத்தை டெலிவரி எடுத்த ஏலதாரர் வாகனம் டெலிவரி எடுத்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குள் **Central Motor Vehicle Rules 1989**- விதி எண்: 32-ன்படி தொடர்புடைய **RTO** அலுவலகம் மூலம் வாகனத்தின் **G-Surrender** சான்றிதழை வைத்து வாகனம் உரிமையாளரின் பெயரில் பதிவு செய்யப்பட வேண்டும். மாற்றம் செய்யப்பட்ட விவரத்தினை சம்பந்தப்பட்ட வாகன அலுவலகத்திற்கு தெரிவிக்கப்பட வேண்டும். இவ்வாறு மாற்றம் செய்யப்படாமல் வாகனத்தை பயன்படுத்தினால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு ஏலதாரரே முழுப்பொறுப்பு எனவும் தீயணைப்புத்துறை பொறுப்பு ஏற்க இயலாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

Scanned with CamScanner

25. தீயணைப்பு மீட்புபணிகள் துறை வாகனத்தை இவ்வலுவலக விடுவிப்பாணை மூலம் டெலிவரி எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அந்த வாகனத்திற்கு ஏற்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஏலதாரரே முழுப் பொறுப்பாவார் எனவும் வாகனம் டெலிவரி கொடுத்த பின்னர் தீயணைப்பு மீட்புபணிகள் துறை எந்த விதத்திலும் பொறுப்பு ஏற்காது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

26. ஒப்பந்த புள்ளியில் குறிப்பிடும் தொகையானது விற்பனை வரி சேராத நிகர தொகையாகும்.

27. சரக்கு மற்றும் சேவை வரியானது அரசின் ஆணையின்படி அவ்வப்போது அமலில் இருக்கும் விகிதத்தின்படி வசூலிக்கப்படும்.

28. ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி அளிப்பவர் மட்டுமே கையொப்பமிட்டுருக்க வேண்டும். வேறொருவர் கையொப்பமிட்டிருந்தால் ஒப்பந்த புள்ளி நிராகரிக்கப்படும். EMD தொகை பறிமுதல் செய்யப்பட்டு அரசுக்கணக்கில் செலுத்தப்படும்.

29. ஏலதாரர்கள் ஒரு வாகனத்திற்கு இருவர் ஒரே விலைப்புள்ளியை (TIE Rate) குறிப்பிட்டிருக்கும் பட்சத்தில் கீழ்கண்டவாறு ஏலக்குழுவின் முன்னிலையில் விலை நிர்ணயம் செய்யப்படும். ஒரே விலை கோரியுள்ள ஏலதாரர்கள் கீழ்குறிப்பிடப்பட்டிருக்கும் தொகையின் மடங்கில் விலைப்புள்ளியை டெண்டர் படிவத்தில் குறிப்பிட்டு ஏலக்குழுவினரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதை ஏலக்குழுவினர் ஏலதாரர்கள் முன்னிலையில் உறையை பிரித்து விலைப்புள்ளியில் கோரியுள்ள தொகையை அறிவிக்க வேண்டும்.

1. Motor Cycle - இருச்சக்கர வாகனம் ரூ.100/- குறைந்தபட்ச கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.
2. Light Motor Vehicle - இலகுரக வாகனம் ரூ.500/- குறைந்தபட்ச கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.
3. Heavy Vehicles - கனரக வாகனம் ரூ.1000/- குறைந்தபட்ச கூடுதலான விலைப்புள்ளி அளிக்க வேண்டும்.

மேற்கூறிய முறையில் மீண்டும் ஒரே விலைப்புள்ளியில் இரு ஏலதாரர்களும் விலைப்புள்ளி அளிக்கும் பட்சத்தில் டெண்டர் கமிட்டி முன்னிலையில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படும்.

30. இந்த ஏல நிபந்தனையுடன் வாகனங்களின் விவரமும் அவைகள் இருக்கும் இடமும் இந்த அலுவலகத்தில் வாகனம் உள்ள நிலைப்படியே வாகனப்பட்டியல் தயாரித்து கொடுக்கப்பட்டுள்ளது. ஆகையால் வாகனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுக்கும் ஒவ்வொரு ஏலதாரரும் வாகனத்தை நேரில பார்த்து மற்றும் ஆவணங்கள் மற்றும் பதிவுச்சான்று போன்றவற்றை சரிபார்த்த பின்னர் ஒப்பந்தப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. வாகனத்தை பார்வையிடாமலும் ஆவணங்களை சரிபார்க்காமலும் அட்டவணையில் உள்ள விவரங்களை மட்டும் கொண்டு விலைப்புள்ளி கொடுத்து ஏற்படும் தவறுகளுக்கு தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புபணித்துறை எந்த விதத்திலும் பொறுப்பேற்காது என தெரிவிக்கப்படுகிறது. ஆகையால் ஏலதாரர் வாகனத்தை பார்வையிட்டு கொடுக்கப்பட்ட விபரங்களை உறுதி செய்து மனநிறைவு கொண்டால் மட்டுமே விலைப்புள்ளி கொடுக்குமாறு தெரிவிப்படுகிறார்கள்.

31. ஏலதாரர் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள வாகனங்கள் குறித்து தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புபணிகள் துறையில் ஒவ்வொரு ஏலதாரரும் பார்வையிட்டு தெரிவிக்கப்பட்ட விவரங்களுடன் வாகனங்கள் உள்ளபடியான நிலையில் உள்ளதா என சரிபார்த்துக்கொண்டு கையொப்பமிட வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது. தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புபணிகள் துறை கழிவு வாகனங்கள் பதிவேட்டில் கையொப்பமிடாமல் அவ்வாகனத்தை பார்வையிடாமல் ஒப்பந்தப்புள்ளி கொடுத்து அதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு இவ்வலுவலகம் எந்த பொறுப்பேற்காது வாகனங்கள் உள்ளது உள்ளபடியான நிலையிலேயே ஏலத்திற்கு விடப்படுகிறது.

32. மேற்படி நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் உறுதியாக்கம் செய்து விடுவிப்பு உத்தரவுகள் வழங்கப்பட்ட பின் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் மற்றும் அது தொடர்பான ஏதேனும் குறைகள் இருந்தால் அது தொடர்பாக வழக்குப்பதிவு செய்வதாக இருப்பின் அவ்வழக்கானது உயர்நீதிமன்றத்தில் தான் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று இதன் மூலம் ஏலதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

33. எந்தவொரு ஊர்திக்கும் பெறப்படும் விலைப்புள்ளியை ஏற்கவோ அல்லது எந்த காரணமும் குறிப்பிடாமல் நிராகரிக்க தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புபணிகள் துறை, ஏலக்குழு தலைவர் முழு அதிகாரம் பெற்றவர் என அறிவிக்கப்படுகிறது.

34. விளம்பரம் செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி மற்றும் ஏலத்தை எந்த நேரத்திலும் நாள் மற்றும் நேரம் மாற்றி அமைக்க அல்லது முற்றிலும் ரத்து செய்ய தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புபணிகள் துறை, ஏலக்குழு தலைவர் முழு அதிகாரம் பெற்றவர் என அறிவிக்கப்படுகிறது.

துணை இயக்குநர்,
தீயணைப்பு-மீட்புப்பணிகள் துறை,
தென்மண்டலம், மதுரை.

Scanned with CamScanner